2. தகவல் கோரல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(அ) காங்கேயநல்லூர் ஒன்றியத்தில் மஞ்சள் காமாலை நோய் பரவியிருப்பது.

திரு. என். ஏ. பூங்காவனம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி தொகுதியில் காங்கேயநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அனைத்துப் பகுதி... ம் பல நூற்றுக் கணக்கான மக்களுக்கு மஞ்சள் காமாலை ...ய் ஏற்பட்டு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அவதிப்ப... ார்கள். அது சம்பந்தமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோட்டீஸ் ...த்துவிட்டு கேட்கவேண்டும்.

(ஆ) சென்னையில் அடைமழையினால் ஏற்பட்... சேதம்

டாக்டர் கே. பி. இராமலிங்கம்; மாண்புமிகு பேரவை ...லைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக செ...னை ...கரில் கடுமையான மழை பெய்த காரணத்தால், வெள்ளத்த... ...ழை குடிசை வாசிகளும் மற்றவர்களும் பாதிக்கப்பட்டிருக்கி... ...கள் இதுகுறித்து அரசு....

திரு. சோ. அழகர்சாமி; ஏற்கெனவே வெள்ளம் சம்ப...த மாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது...

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றும் இதுபற்றிக் கேட்டார்கள். நேற்று மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் நேரில் பல இடங்களைப் போய்ப் பார்த்திருக்கிறார்கள். குடிசை வாரியத் தலைவர் அவர்களும் பல இடங்களைப் போய்ப் பார்த்திருக்கிறார்கள். தாழ்வான பகுதிகளிலே சங்கடப்படுபவர்களையெல்லாம் பாதுகாப்பான பகுதிகளிலே வைத்து மாநகராட்சி மூலமாக உணவு வழங்கப்படுகிறது. சென்னை நகரிலே பலத்த மழையினால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் நிரம்பி குடிசைப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டன. இதனால் வடசென்னைப் பகுதியில் சுமார் 5,000 குடும்பங்களும் தென்சென்னைப் பகுதியில் சுமார் 4,000 குடும்பங்களும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாயின. வடசென்னையில் 23,085 பேர்களுக்கும் தென் சென்னையில் 19,980 பேர்களுக்கும் இலவசமாக உணவு வழங்கப்பட்டது. மழை நின்று விட்டதால் இரவில் பலர் அவர்கள் இருப்பிடங்களுக்குச் சென்று விட்டார்கள். இருந்தபோதிலு அப்படித் திரும்பிச் செல்ல முடியாமலிருந்த 30,000 குடும்பகளுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது ..(குறுக்கீடு)